RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 282 | அக்டோபர்.13 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## எகிப்தில் காசா அமைதிக்கான உச்சி மாநாடு: பிரதமர் மோடிக்கு ட்ரம்ப், அல் சிசி அழைப்பு



கெய்ரோ, அக்.13-

பாலஸ்தீனத்தின் காசா பகுதி அமைதிக்கான உச்சி மாநாடு நாளை (அக்.13) எகிப்து நாட்டில் நடைபெறுகிறது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் மற்றும் எகிப்து அதிபர் அல் சிசி ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர்.

கடந்த 2023 அக்டோபரில் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலால் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்புக்கு இடையிலான மோதல் மிக தீவிரமானது. அதற்கடுத்த இந்த இரண்டு ஆண்டுகளில் இஸ்ரேல் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கை காரணமாக பாலஸ்தீனத்தை சேர்ந்த சுமார் ஆயிரக்கணக்கான காசா மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்கா உட்பட உலக நாடுகளின் தீவிர முயற்சியினால் அண்மையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. கடந்த 10ம் தேதி காசாவில் போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. இதன் பின்னர் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல் காரணமாக காசாவில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பி வருகின்றனர்.

இந்நிலையில், போர் நிறுத்தத்தை கண்காணிக்க அமெரிக்கா உட்பட சில நாடுகள் தங்களது வீரர்கள் மற்றும் அதிகாரிகளை பணியமர்த்தி உள்ளது. இந்த சூழலில் காசா அமைதிக்கான உச்சி மாநாடு நாளை (அக்.13) நடைபெறுகிறது.

சுமார் 20 நாடுகள் பங்கேற்கும் இந்த மாநாட்டுக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் மற்றும் எகிப்து அதிபர் அல் சிசி ஆகியோர் தலைமை தாங்குகின்றனர். இதில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு அதிபர்கள் ட்ரம்ப் மற்றும் அல் சிசி அழைப்பு விடுத்துள்ளனர்.

எகிப்து நேரப்படி நாளை மதியம் இந்த மாநாடு நடைபெறுகிறது. இதில் பிரதமர் மோடி பங்கேற்பது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் இதுவரை வெளியாகவில்லை. இதில் பிரதமர் மோடி பங்கேற்றால் அது பல்வேறு வகையில் சாதகமாக அமையும் என்ற கருத்து நிலவுகிறது.

அந்த வகையில் மத்திய கிழக்கு பகுதியில் அமைதி நிலை திரும்புவது சார்ந்து இந்தியாவின் நிலைப்பாடு, அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பை பிரதமர் மோடி சந்திப்பதற்கான வாய்ப்பு, எகிப்து உடனான இந்தியாவின் உறவு, பாலஸ்தீனத்துக்கான இந்தியாவின் ஆதரவு உள்ளிட்டவை உலக அளவில் வெளிப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## “கலை என்பது சமுதாய வளர்ச்சிக்கு பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும்!”

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்!



சென்னை, அக்.13-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற கலைமாமணி விருது வழங்கும் விழாவில் ஆற்றிய சிறப்புரை பின்வருமாறு,

முதலில், இங்கே விருது பெறுகின்ற அத்தனை கலைஞர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும், கைத்தட்டல்களையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரைக்கும் எப்போதுமே கலைகளையும், கலைஞர்களையும் கொண்டாடுகின்ற ஒரு இயக்கம். தமிழ்நாட்டு மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த கலையையும், ஒரு கருவியாக பயன்படுத்தியவர்கள் தான், நம்முடைய திராவிட இயக்க தமிழ்நாட்டு தலைவர்கள். பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் நாடகத் துறையிலும், திரைத் துறையிலும் முத்திரைபதித்தவர்கள் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் திரைப்படங்களிலும், நாடகங்களிலும் நடித்திருக்கின்றவர்தான். இன்றைக்கும், இசையையும், நாடகங்களையும், திரைப்படங்களையும் ரசிக்கக் கூடியவர் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். எனவே தான், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் நடத்துகின்ற அத்தனை நிகழ்ச்சிகளையும், அதனுடைய செயல்பாடுகளையும் தொடர்ந்து அவர் ஊக்கப்படுத்தி வருகின்றார்.

இந்த தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்திற்கும், கலைமாமணி விருதுக்கும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கும் இந்த அரங்கத்திற்கும் மிக, மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இங்கே அண்ணன் வாகை சந்திரசேகர் அவர்கள் குறிப்பிட்டது போல, சங்கீத நாடக சங்கம் என்று இருந்த பெயரை தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் என்று மாற்றியமைத்தவர் நம்முடைய முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான்.

இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கக்கூடிய இந்த அரங்கத்திற்கு கலைவாணர் அரங்கம் என்று பெயர் சூட்டியதும் டாக்டர் கலைஞர் அவர்கள் தான்.

அதே போல் ஆரம்பத்தில், 'கலா சிகாமணி', என்ற பெயரில் தான் இந்த விருதுகள் வழங்கப்பட்டன. அதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் பெயர் மாற்றம் செய்து “கலைமாமணி விருது” என்று அறிவித்தார்.

1967ஆம் ஆண்டில், கலைஞர் அவர்களே கலைமாமணி விருதிற்கு சிறந்த வசனகர்த்தாவாக தேர்வு செய்யப்பட்டார். அப்போது அவர் அமைச்சர், முதலமைச்சராக இருந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். கலைஞர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தார். இந்த அரங்கத்தில் கலைஞர் அவர்களுடைய பெயரைச் சொன்னதும், அவர் எழுந்து, விருது வாங்குவதற்காக மேடைநோக்கி வந்தார்.

அப்போது முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், அந்த விருதை கலைஞர் அவர்களிடம் கொடுக்காமல், விருதுக்கான பதக்கத்தை (Medal-ஐ) தன்னுடைய கழுத்திலே போட்டுக் கொண்டார். பிறகு தான், அந்த பதக்கத்தை கலைஞர் அவர்களின் கழுத்தில் அணிவித்தார். கலைமாமணி விருது பெறுவதால், கலைஞர் அவர்களுக்கு கிடைத்த பெருமையை தனக்கு கிடைத்த பெருமையாக கொண்டாடினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

எழுத்தாளர், நாடக ஆசிரியர், வசன கர்த்தா, பாடலாசிரியர், அரசியல் தலைவர், முதலமைச்சர் என்று கலைஞர் அவர்களுக்கு எத்தனையே பரிணாமங்கள் இருந்தாலும், கடைசிவரைக்கும் அவருடைய அடையாளமாக 'கலைஞர்' என்கிற பெயர்தான் இன்று வரைக்கும் நிலைத்து நீடித்து இருக்கிறது.

இங்கே விருதுகளை பெறவிருக்கின்ற கலைஞர்களுக்கு ஒன்றை சொல்லி கொள்ள நான் விரும்புகின்றேன். கலைமாமணி விருதை வாங்குவதால் உங்களுக்கு பெருமை என்று சொல்வதை விட, உங்களைப் போன்ற சிறந்த கலைஞர்களை கொண்டிருப்பதால் நம்முடைய தமிழ்நாட்டுக்கு அது பெருமை என்பதை நான் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

2009ஆம் ஆண்டு, இதே கலைவாணர் அரங்கத்திலே நடந்த நிகழ்ச்சியில், கலைமாமணி விருதுகளை வழங்கிவிட்டு பேசும்போது டாக்டர் கலைஞர் அவர்கள் இதே மேடையில் பேசியிருக்கிறார், நீங்கள் தேசிய விருதுகளை வாங்கலாம், சர்வதேச விருது பெறலாம். ஆனால், எந்த விருதாக இருந்தாலும் அது ஒரு தாயின் முத்தத்திற்கு ஈடாகாது.

இந்த கலைமாமணி விருது என்பது அந்த தாயின் முத்தத்திற்கு ஈடானது என்று கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். தாயின் முத்தத்திற்கு நிகரான அந்த கலைமாமணி விருதை தான் இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு தர இருக்கின்றார்கள்.

நம்முடைய அரசு அமைந்த பிறகு, நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உதவித் தொகையை, 2 ஆயிரம் ரூபாயில் இருந்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி கொடுத்தார்கள். அதுமட்டுமல்ல, இந்த மன்றத்திற்காக ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டு வந்த நிதி 3 கோடி ரூபாயாக இருந்தது, நம்முடைய அரசு அமைந்த பிறகு அந்த 3 கோடி ரூபாயை வருடத்திற்கு 4 கோடி ரூபாயாக உயர்த்தி கொடுத்தார் முதலமைச்சர் அவர்கள்.

அதேபோல், ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொங்கல் திருவிழா கொண்டாடப்படுகின்றது. அந்த விழாக்களில், அனைத்து கலைஞர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கின்ற வகையிலும், நம்முடைய கலைகளை மீட்டெடுக்கின்ற வகையிலும், இசைச் சங்கமம், கலைச் சங்கமம் என கலை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் தொடர்ந்து கலைவிழாக்கள் நடத்தப்படுகின்றது.

சமீபத்தில், தமிழில் சிறப்பான கலை நூல்களை வெளியிடுகின்ற 5 நூலாசிரியர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. எழுத்தாளர்களுக்கு வீடுகள், மறைந்த சிறந்த எழுத்தாளர்களுக்கு மணி மண்டபம் போன்றவற்றை நம்முடைய அரசு தொடர்ந்து உருவாக்கி வருகின்றது.

இங்கே வந்திருக்கக் கூடிய கலைஞர்களுக்கு தனிப்பட்ட முறையில் என்னுடைய ஒரு வேண்டுகோளை வைக்க நான் விரும்புகின்றேன். உங்களுடைய கலைகளை நீங்கள் உங்களோடு நிறுத்திக் கொள்ளாமல், அடுத்த தலைமுறைக்கு கொண்டு போய் சேர்க்கும் வகையில் இன்றைக்கு இருக்கக்கூடிய மாணவர்கள், இளைஞர்களுக்கு நீங்கள் பயிற்சி அளிக்க வேண்டும். அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

Social media-வான You-Tube, Instagram, Twitter போன்ற தளங்களில் உங்களுடைய கலைகளை நீங்கள் உலகறியச் செய்ய வேண்டும். கலை என்பது வெறும் பொழுதுபோக்காக மட்டுமல்லாமல், அது சமுதாய வளர்ச்சிக்கு பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, அண்ணன் வாகை சந்திரசேகர் அவர்களுக்கும், அக்கா விஜயா தாயன்பன் அவர்களுக்கும், இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த இந்த மன்றத்தைச் சேர்ந்த அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த இயல், இசை, நாடக மன்றம் என்றைக்கும் கலைஞர்களின் முன்னேற்றத்திற்கு துணை நிற்கும்.

இங்கே பல்வேறு பிரிவுகளில் கலைமாமணி விருதுகளைப் பெற்றுள்ள அத்தனை கலைஞர்களுக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளையும், என்னுடைய பாராட்டுக்களையும் தெரிவித்து, இந்த வாய்ப்பிற்கு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

## மாற்றுத் திறனாளிகள் வாங்கும் காருக்கான ஜிஎஸ்டி சலுகை ரத்து : அன்புமணி கண்டனம்



சென்னை, அக்.13-

மாற்றுத் திறனாளிகள் கார் வாங்க அளிக்கப்பட்டு வந்த 10% ஜிஎஸ்டி சலுகை ரத்து செய்யப்பட்டதை கைவிட வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அன்புமணி வெளியிட்டுள்ள வலைதள பதிவில்: “உணவுப் பொருள்கள் தொடங்கி வாகனங்கள் வரை பெரும்பான்மையான பொருள்களுக்கான ஜிஎஸ்டி வரியின் அளவு கணிசமாக குறைக்கப்பட்டது மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்த நிலையில், இதைக் காரணம் காட்டி மாற்றுத்திறனாளிகள் மகிழுந்து வாங்க வழங்கப்பட்டு வந்த 10% வரிச் சலுகை ரத்து செய்யப்பட்டு இருப்பது வருத்தமளிக்கிறது.

ஜிஎஸ்டி வரிச் சீர்திருத்தத்திற்கு முன்பாக அனைத்து மகிழுந்துகளுக்கும் 28% வரி வசூலிக்கப்பட்டு வந்தது. மாற்றுத் திறனாளிகள் மகிழுந்து வாங்கும் போது அவர்களுக்கு 10% வரிச் சலுகை வழங்கப்பட்டு, 18% மட்டுமே வரி வசூலிக்கப்பட்டு வந்தது. இப்போது சிறிய மகிழுந்துகளுக்கான ஜிஎஸ்டி வரி 18% ஆக குறைக்கப்பட்டுள்ள நிலையில், பெரிய மகிழுந்துகளுக்கான வரி 40% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்திற்கு பிறகு மாற்றுத் திறனாளிகள் வாங்கும் சிறிய மகிழுந்துகளுக்கான 10% வரிச் சலுகை ரத்து செய்யப்பட்டுள்ளது. அனைத்துப் பிரிவினருமே சிறிய மகிழுந்துகளுக்கு 18% வரி செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்ப ட்டுள்ளது. இது நியாயமல்ல.

மாற்றுத் திறனாளிகளுக்கு சலுகை அளிக்க வேண்டும் என்பதற்காகத் தான் அவர்களுக்கு 10% வரிச் சலுகை வழங்கப்பட்டு வந்தது. பொதுவாகவே மகிழுந்துகளுக்கான வரிகள் குறைக்கப்பட்டதைக் காரணம் காட்டி வரிச் சலுகையை ரத்து செய்வது அநீதியாகும். மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்த இந்த வரிச் சலுகை தான் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளும் மகிழுந்து வாங்குவதற்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தது. இந்த சலுகை நிறுத்தப்பட்டால் அவர்கள் மகிழுந்து வாங்குவதற்கான வாய்ப்புகள் தடைபட்டு போய்விடும்.

எனவே, மாற்றுத் திறனாளிகள் மகிழுந்து வாங்க அளிக்கப்பட்டு வந்த 10% ஜிஎஸ்டி சலுகை ரத்து செய்யப்பட்டதை கைவிட வேண்டும். அதன் மூலம் அவர்களுக்கு 8% ஜிஎஸ்டி விதிப்பில் மகிழுந்து கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்” என்று அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

## 950 மையங்களில் தமிழ் இலக்கியத் திறனறி தேர்வு: 2.70 லட்சம் பிளஸ் 1 மாணவர்கள் பங்கேற்பு

சென்னை, அக்.13-

தமிழகம் முழுவதும் 950 மையங்களில் தமிழ் மொழி இலக்கியத் திறனறி தேர்வு நேற்று நடைபெற்றது. பிளஸ் 1 மாணவர்கள் 2.70 லட்சம் பேர் தேர்வு எழுதினர்.

பள்ளி மாணவர்களிடம் தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்த, திறனறி தேர்வை பள்ளிக்கல்வி இயக்ககம் நடத்துகிறது. பிளஸ் 1 பயிலும் மாணவர்கள் இந்த தேர்வை எழுதலாம். இதில், 50 சதவீதம் அரசுப் பள்ளி மாணவர்கள், எஞ்சிய 50 சதவீதம் அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் பிற தனியார் பள்ளி மாணவர்கள் என அதிக மதிப்பெண் பெறும் 1,500 பேர் தேர்வு செய்யப்படுவார்கள். அவர்களுக்கு 2 ஆண்டுக்கு மாதம்தோறும் ரூ.1,500 கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

இந்நிலையில், நடப்பு கல்வி ஆண்டுக்கான தமிழ் மொழி இலக்கியத் திறனறி தேர்வு தமிழகம் முழுவதும் 950 மையங்களில் நேற்று காலை 10 முதல் மதியம் 12 மணி வரை நடைபெற்றது. 2.70 லட்சம் மாணவ, மாணவிகள் எழுதினர். சென்னையில் அசோக் நகர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி என்கேடி. பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சாந்தோம் மேல்நிலைப் பள்ளி, ஷெனாய் நகர் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி உள்ளிட்ட மையங்களில் ஏராளமானோர் ஆர்வத்தோடு தேர்வு எழுதினர். இந்த தேர்வுக்கான உத்தேச விடைகள் ஓரிரு நாளில் வெளியிடப்படும். அதன்பிறகு தேர்வு முடிவுகள் வெளியாகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ‘‘வரிவிதிப்பு நடவடிக்கைகளில் பிடிவாதமாக இருந்தால்...’’ அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை



பெய்ஜிங், அக்.13-

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் 100% வரி அச்சுறுத்தலுக்கு பதிலளித்துள்ள சீனா, ‘நாங்கள் ஒரு வரிப் போரை விரும்பவில்லை, ஆனால் நாங்கள் அதைப் பற்றி பயப்படவும் இல்லை. அமெரிக்கா, அச்சுறுத்தல்களுக்குப் பதிலாக பேச்சுவார்த்தைகள் மூலம் வேறுபாடுகளைத் தீர்க்க வேண்டும்’ என்று வலியுறுத்தியுள்ளது.

சீனப் பொருட்களுக்கு நவம்பர் 1ம் தேதி முதல் கூடுதலாக 100% வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இது தொடர்பாக சீன அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், ‘சீனாவின் நிலைப்பாடு எப்போதும் நிலையானது. நாங்கள் ஒரு வரிப் போரை விரும்பவில்லை, ஆனால் நாங்கள் அதைப் பற்றி பயப்படவும் இல்லை. அதிக வரிகள் விதிப்பதாக அடிக்கடி அச்சுறுத்துவது சீனாவுடன் ஒத்துப்போக சரியான வழி அல்ல.

அமெரிக்கா அச்சுறுத்தல்களுக்குப் பதிலாக பேச்சுவார்த் தைகள் மூலம் வேறுபாடு களைத் தீர்க்க வேண்டும். அமெரிக்க தரப்பு அதன் வரிவிதிப்பு நடவடிக்கைகளில் பிடிவாதமாக இருந்தால், சீனா அதன் சட்டபூர்வமான உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னணி என்ன? அமெரிக்க அதிபராக பொறுப்பேற்ற ட்ரம்ப் பல்வேறு நாடுகளின் பொருட்களுக்கான வரியை கணிசமாக அதிகரித்தார். இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதால் வரியை சற்று குறைத்தார். அந்த வகையில் சீன பொருட்களுக்கு இப்போது 30% வரி விதிக்கப்படுகிறது.

இந்நிலையில், அதிபர் ட்ரம்ப் கடந்த 10ம் தேதி தனது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளதாவது: ‘ஸ்மார்ட்போன், மின்சார வாகனங்கள், ராணுவ தளவாடங்கள் உற்பத்திக்கு தேவைப்படும் அரியவகை தனிமங்கள் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்படும் என்று சீன அதிபர் ஜி ஜின்பிங் உலக நாடுகளுக்கு கடிதம் எழுதியுள்ளார். உலக நாடுகளை தனது பிடியில் வைத்திருக்க விரும்பும் சீனாவை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

எனவே, சீனாவில் இருந்து இறக்குமதியாகும் அனைத்து பொருட்களுக்கும் நவம்பர் 1ம் தேதி முதல் கூடுதலாக 100% வரி விதிக்கப்படும். சீனா வேறு ஏதேனும் நடவடிக்கை எடுத்தால், இந்த உயர்வு உடனடியாக அமலுக்கு வரும்’ இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அக்டோபரில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்திக்க உள்ளதாக ஏற்கெனவே தெரிவித்திருந்த ட்ரம்ப், அந்த சந்திப்பு நடப்பதில் அர்த்தம் இல்லை என்றும் அந்த பதிவில் கூறியுள்ளார்.

# திண்டுக்கல் மாவட்ட டாஸ்மாக் வருவாயை நீதிமன்ற கணக்கில் செலுத்த உத்தரவு

மதுரை, அக்.13-

திண்டுக்கல்லில் சாலை விரிவாக்கத்துக்காக நிலத்தை அரசு கையகப்படுத்திய விவகாரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க தாமதமானதையடுத்து, அம்மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக் வருவாயை நீதிமன்ற கணக்கில் செலுத்த உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவிட்டது.

திண்டுக்கல்லை சேர்ந்த முத்து, கல்யாணி, சிவசாமி, காளிமுத்து உள்ளிட்ட 30 பேர் தங்களது கடைகள் அமைந்திருந்த இடத்தை 2017ம் ஆண்டு கையகப்படுத்தியதற்கு வழங்கப்பட்ட இழப்பீட்டில் குறைக்கப்பட்ட தொகையை வழங்கக் கோரி 2019ம் ஆண்டு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த மாவட்ட நீதிமன்றம் 2021ம் ஆண்டு ரூ.4 கோடியே 37 லட்சத்து 42 ஆயிரத்து 783 இழப்பீடாக வழங்க அரசுக்கு உத்தரவிட்டது. இதை எதிர்த்து அரசு தரப்பில் 2023ம் ஆண்டு உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் குறைக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை 8 வாரங்களுக்குள்ளாக வழங்கி, உத்தரவு நிறைவேற்றப்பட்டது தொடர்பான அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் வேல்முருகன், ராமகிருஷ்ணன் அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் முத்து கணேசபாண்டியன் ஆஜரானார். பின்னர் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், ''ஜூலை 28, ஆக. 26, செப். 1, அக்.7 ஆகிய தினங்களில் 4 முறை வழக்கு விசாரணை தள்ளிவைக்கப்பட்ட நிலையில், தற்போது வரை அரசு தரப்பில் உத்தரவை நிறைவேற்றவோ அல்லது உச்ச நீதிமன்றத்தில் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து வழக்கை தாக்கல் செய்யவோ எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

எனவே, தமிழக அரசு இந்த உத்தரவின் நகலை பெற்ற தினத்தில் இருந்து, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் கடைகளின் தினசரி விற்பனை தொகையையும் திண்டுக்கல் நிலம் கையகப்படுத்துதல் மறுசீரமைப்பு வழக்கை விசாரிக்கும் முதன்மை மாவட்ட நீதிபதியின் கோப்பில் உள்ள இந்த வழக்குகளின் நன்மைக்காக வைப்புத்தொகையாக நீதிமன்றக் கணக்கில் செலுத்த உத்தரவிடப்படுகிறது. மறு உத்தரவு வரும் வரை இந்த உத்தரவு அமலில் இருக்கும்'' என்று உத்தரவிட்டனர்.

மேலும், இந்த உத்தரவின் நகலை டாஸ்மாக்கின் மேலாண் இயக்குநர் மற்றும் திண்டுக்கல் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் ஆகியோருக்கு அனுப்ப நீதிமன்ற பதிவாளருக்கு அறிவுறுத்தினர்.

# என்டிஏ கூட்டணிக்கு யார் வந்தாலும் சேர்க்க தயார்: நயினார் நாகேந்திரன் அழைப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர், அக்.13-

'தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு (என்டிஏ) யார் வந்தாலும் சேர்த்துக் கொள்ள தயாராக இருக்கிறோம்' என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.



'தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்' என்ற பெயரில் தேர்தல் பிரச்சாரப் பயணத்தை, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் இன்று (அக்.12) மதுரையில் தொடங்குகிறார். இதையொட்டி நேற்று ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் நயினார் நாகேந்திரன் தரிசனம் செய்தார். பாஜக மாநில துணைத்தலைவர் கோபால்சாமி, வழக்கறிஞர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன், மாவட்டத் தலைவர் சரவணதுரை ராஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன் கூறியதாவது: தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வரவேண்டும் என ஆண்டாள் சந்நிதியில் வேண்டினேன். தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி சுற்றுப்பயணம் செய்து வருகிறார். பாஜக சார்பில்நான் நாளை (இன்று) மதுரையில் பிரச்சார பயணத்தைத் தொடங்கி தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளேன். பேரணி மதுரையில் தொடங்கினாலும் ஆண்டாள் கோயிலில் சுவாமி தரிசனம் செய்து, இங்கிருந்தே எனது பயணத்தைத் தொடங்குகிறேன். தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைக்கும்.

அதிமுக மீது தினகரன் விமர்சனம்: அதிமுக மீது டிடிவி.தினகரனுக்கு என்ன வெறுப்பு என தெரியவில்லை. என் மீதும் வெறுப்புடன்தான் பேசினார். அவர்களது சொந்த பிரச்சினைக்காக கட்சிகளைப் பற்றி தவறாகப் பேசக் கூடாது என்பது என் கருத்து. தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு யார் வந்தாலும் சேர்த்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஜனவரி மாதத்தில் கூட்டணி இறுதி வடிவம் பெறும்.கூட்டணி பலமாக உள்ளதால் திமுகதான் ஆட்சி அமைக்கும் என்கிற வதந்தி தமிழகத்தில் பரவி வருகிறது. அதைப் பொய்யாக்கி தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்கு வரும். இவ்வாறு அவர் கூறினார்.



# மாற்றுக்கட்சியில் இருந்து வருபவர்களுக்கு அதிமுகவில் முழு பாதுகாப்பு கிடைக்கும்: இபிஎஸ் உறுதி

நாமக்கல், அக்.13-

'மாற்றுக் கட்சியில் இருந்து வருபவர்களுக்கு அதிமுகவில் முழு பாதுகாப்பு, தேவையான உதவிகள் கிடைக்கும்' என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் தங்கமணி ஏற்பாட்டில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி முன்னிலையில், மாற்றுக்கட்சியினர் 1,000 பேர் அதிமுகவில் இணையும் நிகழ்ச்சி நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் தங்கமணி பேசும்போது, ''பொதுச் செயலாளர் பழனிசாமி போன்ற தலைவர்கள்தான் தமிழகத்துக்கு தேவை. அவரை நம்பாமல் கெட்டவர்கள் ஏராளம், நம்பி கெட்டவர்கள் யாரும் இல்லை. அவரது பயணத்துக்கு மக்கள் மிகுந்த ஆதரவு தருகின்றனர். திமுக ஆட்சி முடிவுக்கு வர வேண்டும் என மக்கள் முடிவு செய்து விட்டனர்'' என்றார்.

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசியதாவது: அதிமுகவை பொறுத்தவரை சாதாரண தொண்டன் கூட உயர்ந்த பதவிக்கு வர முடியும். தலைமைக்கு விசுவாசமாக, கட்சிக்கு விசுவாசமாக, மக்களுக்கு சேவை செய்யக்கூடிய அனைவருக்கும் உயர்ந்த பதவி தேடி வரும். மாற்றுக் கட்சியில் இருந்து வருபவர்களுக்கு அதிமுகவில் முழு பாதுகாப்பு, தேவையான உதவிகள் கிடைக்கும்.

குடிமராமத்து திட்டத்தின் மூலம் பொதுப்பணித்துறை ஏரிகள் திட்ட அனைத்து ஏரிகளையும் தூர்வாரி அதிக தண்ணீர் சேமிக்கும் வழி செய்தோம். கரோனா காலத்திலும், மழை வெள்ளத்திலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டபோது ரூ.12,100 கோடி விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. நாமக்கல், சேலம் மாவட்டங்களில் மட்டும் ரூ.560 கோடி கடன் தள்ளுபடி செய்ய ப்பட்டது. சேலம் மாவட்டம் தலைவாசலில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் கால்நடை பூங்கா உருவாக்கி னோம். ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு அந்த திட்டத்தை முழுமையாக செயல்படுத்த வில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் சரோஜா, முன்னாள் எம்எல்ஏக்கள் பொன்.சரஸ்வதி, கே.கே.பி.பாஸ்கர் உள்பட அதிமுகவினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அச்சமற்ற சுதந்திரப் போராட்ட வீரர் ஜெயப்பிரகாஷ் நாராயண்: சி.பி.ஆர் புகழாரம்

புதுடெல்லி, அக.13-

பிஹாரின் சோசலிச தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் அச்சமற்ற சுதந்திரப் போராட்ட வீரர் என குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் பாராட்டியுள்ளார். இவர், ஜெயப்பிரகாஷ் நாராயணின் 123 ஆவது பிறந்தநாள் அவரது பிஹார் இல்லம் சென்றார்.



சோசலிச தலைவர் ஜெயபிரகாஷ் நாராயணின் 123வது பிறந்த நாளை முன்னிட்டு, பிஹார் மாநிலம் சரண் மாவட்டத்தில் உள்ள சிதாப் தியாராவில் உள்ள ஜெயபிரகாஷ் இல்லத்துக்கு, குடியரசு துணைத் தலைவர் சிபிஆர் நேரில் சென்றார். அங்கு, ஜெயபிரகாஷ் நாராயண் கிராமத்தில் உள்ள அவரது தேசிய நினைவுச் சின்னத்திற்கு அவர் மலர் அஞ்சலி செலுத்தினார். சோசலிசத் தலைவரும் சுதந்திரப் போராட்ட வீரருமான ஜெயபிரகாஷ் நாராயணின் மனைவியின் பெயரிடப்பட்ட புத்தகக் கடையான 'பிரபாவதி புஸ்தகலயா'வையும் அவர் பார்வையிட்டார்.

இதனிடையே, தனது 19 வயதில், 1974ம் ஆண்டு நாராயண் தொடங்கிய 'சம்பூர்ண கிராந்தி' (முழு புரட்சி) நிகழ்ச்சியில் தான் இணைந்திருந்ததாக குடியரசு துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன் தனது நினைவுகளை பகிர்ந்துகொண்டார். குடியரசு துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன் நேற்று தலைநகர் பாட்னாவிற்கு விமானத்தில் வந்தார். பிஹாரின் ஜெயபிரகாஷ் நாராயண் சர்வதேச விமான நிலையத்தில் அம்மாநில ஆளுநர் ஆரிப் முகமது கான் அவரை வரவேற்றார்.

பின்னர், சரண் மாவட்டத்தின் சீதாப் தியாராவிற்கு அவர் கிளம்பினார். சிதாப் தியாராவைப் பார்வையிடுவதற்கு முன்பு, அவர் தனது எக்ஸ் பதிவில், 'நாட்டின் மக்கள் நாயகரான ஜெயபிரகாஷ் நாராயணின் பிறந்த நாளில், ஜனநாயகத்தின் உண்மையான வீரரின் மரபை நான் மதிக்கிறேன். அவர் ஒரு அச்சமற்ற சுதந்திரப் போராட்ட வீரர், சமூக சீர்திருத்தவாதி. தொலைநோக்கு பார்வையாளரான ஜெயபிரகாஷ் நாராயண் தனது வாழ்க்கையை தேச சேவைக்காக அர்ப்பணித்தார்.

எனது 19வது வயதில் அவரது முழுமையான புரட்சிக்கான அழைப்பில் சேர எனக்கு வாய்ப்பு கிடைத்தது, அதில் முழு வீரியத்துடன் பங்கேற்றேன். அவரது மரபு எப்போதும் நமது முன்னோக்கிச் செல்லும் பாதையை ஒளிரச் செய்யட்டும். அவரது தொலை நோக்குப் பார்வையும் லட்சியங்களும் என்னையும் எண்ணற்ற மற்றவர்களையும் நீதியான மற்றும் சுதந்திரமான இந்தியாவுக்காகப் பாடுபடத் தொடர்ந்து ஊக்கப்படுத்துகின்றன" எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஜெ.பி என்றும் அழைக்கப்படும் ஜெயபிரகாஷ் நாராயண், 1970களில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்திக்கு எதிராக எதிர்க்கட்சியை வழிநடத்தியவர். 1999ல், நாராயணனின் சமூக சேவைக்காக, நாட்டின் மிக உயர்ந்த சிவில் விருதான பாரத ரத்னா வழங்கப்பட்டது. 1920ம் ஆண்டு 18 வயதில் மெட்ரிகுலேஷன் தேர்வை முடித்த பிறகு, ஜே.பி பாட்னாவில் பணிபுரியத் தொடங்கினார்.

அதே ஆண்டில் பிரபாவதியை மணந்தார். தேசியவாதத் தலைவர் மவுலானா அபுல் கலாம் ஆசாத் தனது ஆங்கிலக் கல்வியைக் கைவிடுமாறு அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பின் பேரில், அவர் பாட்னா கல்லூரியை தனது தேர்வுக்கு 20 நாட்களுக்கு முன்பு விட்டுச் சென்றார்.

# ஜம்மு காஷ்மீர் மாநிலங்களவைத் தேர்தல் 3 வேட்பாளர்களை அறிவித்தது பாஜக

புதுடெல்லி, அக்.13-

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் 4 மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தல் வரும் 24ம் தேதி நடைபெற உள்ள நிலையில், இதில் போட்டியிட 3 வேட்பாளர்களை பாஜக அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநில பாஜக தலைவர் சத்பால் சர்மா, குலாம் முகமது மிர், ராகேஷ் மகாஜன் ஆகிய வேட்பாளர்களை அக்கட்சி அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவையில் கட்சிகளின் பலம் அடிப்படையில், ஆளும் தேசிய மாநாட்டுக் கட்சி காங்கிரஸ் கூட்டணி மூன்று இடங்களில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது. பாஜக ஒரு இடத்தில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது.

எனினும், தேர்தலின்போது மற்ற கட்சிகளின் எம்எல்ஏக்களை ஈர்க்கும் நடவடிக்கைகளை பாஜக தீவிரப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் காரணமாகவே, மூன்று வேட்பாளர்களை அது களத்தில் இறக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆளும் தேசிய மாநாட்டுக் கட்சி மூன்று வேட்பாளர்களை கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது. நான்காவது இடத்துக்கு காங்கிரஸ் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் அக்கட்சி தெரிவித்திருந்தது.

# பெண் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படாதது தொழில்நுட்பக் கோளாறு: ஆப்கன் அமைச்சர்

புதுடெல்லி, அக்.13-

புதுடெல்லியில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்புக்கு பெண் பத்திரிகையாளர்களை அழைக்காதது வேண்டுமென்றே அல்ல என்றும், அது தொழில்நுட்பப் பிரச்சினை என்றும் ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அமிர் கான் முட்டாகி கூறினார்.



ஆப்கானிஸ்தான் அமைச்சர் அமிர் கான் முட்டாகி கடந்த வெள்ளிக்கிழமையன்று செய்தியாளர்களை சந்தித்தபோது பெண் பத்திரிகையாளர்களை அனுமதிக்காதது பெரும் சர்ச்சையாகியது. எதிர்க்கட்சிகள் இதனை கடுமையாக விமர்சித்தன.இந்த சூழலில், அமைச்சர் முட்டாகி இன்று மற்றொரு பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தி, அதில் பெண் பத்திரிகையாளர்களை கலந்து கொள்ள அழைத் தார். அப்போது பேசிய முட்டாகி, "அன்று நடந்த பத்திரிகையாளர் சந்திப்பைப் பொறுத்தவரை, அது உடனடியாக அறிவிக்கப்பட்டு, அதில் பங்கேற்கும் பத்திரிகையாளர்களின் பட்டியலும் உடனடியாக முடிவு செய்யப்பட்டது. இதற்காக எங்களுக்கு மிகவும் குறிப்பிடத்தக்க பங்கேற்போர் பட்டியல் வழங்கப்பட்டது. இது ஒரு தொழில்நுட்பப் பிரச்சினை. எங்கள் சகாக்கள் அந்த குறிப்பிடத்தக்க பத்திரிகையாளர்களின் பட்டியலுக்கு அழைப்பை அனுப்ப முடிவு செய்திருந்தனர், இதைத் தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை" எனத் தெரிவித்தார். முன்னதாக, இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்த இந்திய வெளியுறவு அமைச்சகம், டெல்லியில் ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சர் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் இந்திய வெளியுறவுத்துறைக்கு எந்த பங்கும் இல்லை என தெரிவித்திருந்தது.

# தவெகவை கூட்டணிக்குள் இழுக்க அதிமுக நிர்பந்தம்: சிபிஎம் மாநில செயலாளர் சண்முகம் விமர்சனம்

நாமக்கல், அக்.13-

அதிமுக கூட்டத்தில் தவெக கொடியை காண்பித்து, கூட்டணிக்கு வர அக்கட்சிக்கு அதிமுக நிர்பந்தம் கொடுக்கிறது என சிபிஎம் மாநில செயலாளர் சண்முகம் விமர்சித்துள்ளார்.



நாமக்கல்லில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தொழில் பாதுகாப்பு சிறப்பு மாநாடு நடைபெற்றது. இதில் பங்கேற்ற கட்சியின் மாநில செயலாளர் பி.சண்முகம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் அதிக வேலைவாய்ப்பு வழங்ககூடிய துறையாக சிறு தொழில்கள் உள்ளது. ஆனால் மத்திய அரசின் ஜிஎஸ்டி வரி விதிப்பு, பல்வேறு வரிக்கொள்கையின் காரணமாக தமிழகத்தில் பல்வேறு சிறுதொழில் கூடங்கள் மூடப்பட்டுள்ளன.

இதனால் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்தும், வருமானத்தை இழந்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அன்னிய மூலதனம் அன்னிய முதலாளிகள் தமிழகத்தில் தொழில் தொடங்குவது போன்ற தீவிர முயற்சியை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. அதே வேளையில் பராம்பரி யமாக உள்ள தொழில்களை பாதுகாக்க திட்டமிட்ட முயற்சிகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். நாமக்கல் மாவட்டத்தில் உள்ள லாரி, ரிக் மற்றும் கோழிப்பண்ணை தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுபோல் விசைத்தறி தொழிலா ளர்கள் வார முழுவதும் வேலை என்பதில்லாமல் வாரத்தில் சில நாட்கள் மட்டுமே வேலை என்ற நிலை உருவாகியுள்ளது. இதன் விளைவாக தொழிலாளர்கள் கந்து வட்டி வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதனை அடைக்க உடல் உறுப்புகளை விற்பனை செய்யும் நிலைக்கு ஆளாகியு ள்ளனர்.

கிட்னி திருட்டு தொடர்பாக விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. விசாரணை நடைபெற்றாலும் உடல் உறுப்புகளை விற்று தான் பிழைப்பு நடத்த வேண்டும் என்ற நிலைக்கு தொழிலாளர்கள் தள்ளப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பது அவசியமான ஒன்றாகும்.

கடன் தொல்லையில் இருந்து விசைத்தறி தொழிலாளர்களை பாதுகாக்கவும், விசைத்தறி தொழிலை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல் உடல் உறுப்புகளை விற்பனை தொடர்பாக சட்டப்படியான, உறுதியான நடவடிக்கை எடுக்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

உடல் உறுப்புகளை இழந்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கொல்லிமலையில் மலைவாழ் மக்கள் அல்லாதோர் நிலம் வாங்கும் நிலை உள்ளது. இதனால் மலைவாழ் மக்கள் வாழ்வாதரம் இழக்கும் நிலை உள்ளது. அங்கு பல இடங்களில் வன உரிமைக் குழு அமைக்கப்படாமல் உள்ளது.


தமிழகத்தில் மலைப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அங்கு பட்டா வழங்க தடைவிதிக்கும் அரசாணை உள்ளது. இந்த அரசாணை தமிழகத்தில் மட்டும் தான் உள்ளது. இது அநியாயமானது. எந்த விதத்திலும் ஏற்கக்கூடியது இல்லை. இது மலைவாழ் மக்களுக்கு எதிரானது. இந்த அரசாணையை திரும்ப பெற வேண்டும். மேட்டூர் அணை 6 முறை நிரம்பியுள்ளது. அணையின் உபரிநீரை பயன்படுத்தும் வகையில் திருமணிமுத்தாறுகாவிரி உபரிநீர் திட்டத்தை நிறைவேற்ற அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

தவெகவுடன் கூட்டணி என்பது போல் அதிமுக தான் கூறுகிறது. இதுதொடர்பாக தவெக தரப்பில் இருந்து யாரும் எதுவும் கூறவில்லை. தவெக எங்களுடன் வந்துவிட்டார்கள் என கொடி உள்பட காண்பிக்கின்றனர். இது தவெகவிற்கு நிர்பந்தம் கொடுப்பது போல் உள்ளது.

ஜாதிப் பெயர்களை நீக்க தமிழக அரசு எடுத்த முடிவு வரவேற்கத்தக்கது. சில தலைவர்கள் அவர்களின் ஜாதிப்பெயருடன் தான் தமிழகத்தில் அறியப்படுகின்றனர். அதை விட்டுவிட்டு அடையாளப்படுத்துவதை சிரமத்தை ஏற்படுத்தும். அதிமுக ஆட்சி காலத்திலும் கிட்னி திருட்டு நடைபெற்றுள்ளது. திமுக ஆட்சி காலத்தில் மட்டும் தான் நடந்தது போல் எடப்பாடி பேசுகிறார். எது எப்படி இருந்தாலும் விசாரணை முழுமையாக நடைபெற்று அதில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும் என்றார்.

திண்டுக்கல் எம்பி ஆர்.சச்சிதானந்தம், முன்னாள் எம்எல்ஏ, டெல்லிபாபு, நாமக்கல் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஏ.ரங்கசாமி, எம்.அசோகன், ந.வேலுசாமி, எஸ்.சுரேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம் மக்கள்தொகை அதிகரிப்புக்கு ஊடுருவல் காரணம்: மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பேச்சு




புதுடெல்லி, அக்.13-

''பாகிஸ்தான், வங்கதேசத்தில் இருந்து ஊடுருவல் நடைபெறுவதால், இந்தியாவில் முஸ்லிம்கள் மக்கள் தொகை அதிகரித்துள்ளது'' என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார்.

டெல்லியில் 'தைனிக் ஜாக்ரன்' இந்தி செய்தித்தாள் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று பேசியதாவது: இந்தியாவில் பல்வேறு மதத்தவர்களின் மக்கள்தொகையில் ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. இதற்கு பாகிஸ்தான், வங்கதேசம் போன்ற நாடுகளில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவல் நடப்பதே காரணம். இதனால் இந்திய நாட்டின் கலாச்சாரம், ஜனநாயக நெறிமுறைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அப்படி ஊடுருவி வருபவர்களை கண்டறிந்து அப்புறப்படுத்த வேண்டும், அவர்களை மீண்டும் நாடு கடத்த வேண்டும்.

தற்போது முஸ்லிம்களின் மக்கள் தொகை 24.6 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதேநேரத்தில் இந்துக்களின் மக்கள்தொகை 4.5 சதவீதம் சரிந்துள்ளது. இதற்கு காரணம் இந்துக்களிடம் குழந்தை பிறப்பு சரிந்துள்ளது என்று கூற முடியாது. பாகிஸ்தான், வங்கதேசத்தில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவி உள்ளவர்களால் ஏற்பட்டுள்ள மாற்றம். இதனால் என்னென்ன பின்விளைவுகள் ஏற்படும் என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நமது சுதந்திரம், மொழி, கலாச்சாரம் ஆகிய இந்த மூன்றையும் ஒவ்வொரு இந்தியரும் புரிந்து கொள்ளாவிட்டால், இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது.

ஆனால், பாகிஸ்தான், வங்கதேசத்தில் இந்துக்களின் மக்கள்தொகை குறைந்துள்ளது. குஜராத், ராஜஸ்தான் போன்ற எல்லை மாநிலங்களில் தீவிர கண்காணிப்பு போடப்பட்டுள்ளது.

ஊடுருவல் அந்த மாநிலங்களில் தடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்தியாவுக்குள் ஊடுருவும் மையமாக மேற்கு வங்கம் தொடர்ந்து நீடிக்கிறது. ஊடுருவல்காரர்களை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கத்தான் குடியுரிமை திருத்த சட்டம் (சிஏஏ) கொண்டு வரப்பட்டது. அகதிகளாக வருபவர்களுக்கும் ஊடுருவல்காரர்களுக்கும் வித்தியாசம் உள்ளது.

ஊடுருவல்காரர்கள் இந்திய வாக்காளர் பட்டியலிலும் இடம்பெறுகின்றனர். ஊடுருவல்காரர்களுக்கு நீங்கள் ஆதரவு அளித்தால், இந்திய அரசியலமைப்பு சட்டங்களை நீங்கள் அசுத்தப்படுத்துகிறீர்கள் என்று அர்த்தம். ஊடுருவல்காரர்களை கண்டுபிடித்து மத்திய அரசு ஒழிக்கும். இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசினார்.

# ரூ.35,440 கோடி மதிப்பில் 2 வேளாண் திட்டங்கள் தொடக்கம்: விவசாயிகளுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார்



புதுடெல்லி, அக்.13-

பிரதமரின் தானிய வேளாண் திட்டம் மற்றும் தற்சார்பு பருப்பு உற்பத்தி திட்டம் என்ற இரு பெரிய வேளாண் திட்டங்களை ரூ. 34,440 மதிப்பில் பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார். ரூ.5,450 கோடி மதிப்பில் கால்நடை வளர்ப்பு, மீன்வளம் மற்றும் உணவு பதப்படுத்துதல் திட்டங்களையும் அவர் தொடங்கி வைத்தார்.

லோக்நாயக் ஜெய்பிரகாஷ் நாராயணின் பிறந்த நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு, டெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தில் சிறப்பு வேளாண் திட்டத்தை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார். இது குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், பயிர் வகைகளின் உற்பத்தியை விரிவாக்கவும், நீடித்த மற்றும் நிலையான வேளாண் முறைகளை பின்பற்றவும், பஞ்சாயத்து மற்றும் வட்டார அளவில் அறுவடை செய்யப்படும் பயிர்களை சேமிக்கவும், நீர்ப்பாசன திட்டங்களை விரிவுபடுத்தவும், தேர்வு செய்யப்பட்ட 100 மாவட்டங்களில் நீண்ட கால மற்றும் குறுகிய கால பயிர் கடன் வசதிகள் கிடைக்கவும் பிரதமரின் தானிய வேளாண் திட்டம் ரூ.24,000 கோடி மதிப்பில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

பருப்பு உற்பத்தியை மேம்படுத்தவும், பருப்பு உற்பத்தி செய்யப்படும் நிலங்களின் அளவை விரிவுபடுத்தவும், பருப்பு கொள்முதல், சேமிப்பு மற்றும் பதப்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் ரூ.11,440 கோடி மதிப்பில் தற்சார்பு பருப்பு உற்பத்தி திட்டத்தையும் பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார்.

இந்த சிறப்பு வேளாண் திட்டத்தில் விவசாயிகளுடனும் பிரதமர் மோடி கலந்துரையாடினார். வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம் மற்றும் உணவு பதப்படுத்துதல் துறைகளில் ரூ.5,450 கோடிக்கு மேலான திட்டங்களையும் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். ரூ.815 கோடி மதிப்பிலான கூடுதல் வேளாண் திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

பெங்களூருவில் செயற்கை கருவூட்டல் பயிற்சி மையம், குஜராத்தின் அம்ரேலி மற்றும் பனாஸ் பகுதியில் சீர்மிகு மையம், ராஷ்ட்ரிய கோகுல் திட்டத்தின் கீழ் அசாமில் செயற்கை கருவூட்டல் பரிசோதனைக் கூடம், மெஹ்சனா, இந்தூர் மற்றும் பில்வாரா பகுதியில் பால் பவுடர் தயாரிப்பு மையங்கள், அசாம் தேஸ்பூரில் மீன் உற்பத்தி நிலையம், வேளாண் பொருட்கள் பதப்படுத்துதல் மையங்கள், குளிர்சாதன கிடங்குகள், மற்றும் மதிப்பு கூட்டு கட்டமைப்புகளையும் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

ஆந்திராவின் கிருஷ்ணாவில் ஒருங்கிணைந்த குளிர்சாதன கிடங்கு, மதிப்பு கூட்டு கட்டமைப்பு, உத்தராகண்டில் நன்னீர் மீன் வளர்ப்பு, நாகாலாந்தில் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு பூங்கா, புதுச்சேரி காரைக்காலில் ஸ்மார்ட் மற்றும் ஒருங்கிணைந்த மீன்பிடி துறைமுகம், ஒடிசாவின் ஹிராகுட் நகரில் ஒருங்கிணைந்த மீன் பண்ணை ஆகியவற்றுக்கும் பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

இயற்கை வேளாண்மைக்கான தேசிய திட்டத்தின் கீழ் 50,000 விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. கிராமங்களில் 38,000 பேருக்கு, வேளாண் தொடர்பான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# திருமாவளவனின் பாதுகாப்பை அதிகரிக்க தமிழக அரசுக்கு கமல்ஹாசன் எம்.பி வலியுறுத்தல்



சென்னை, அக்.13-

'திருமாவளவனின் சந்தேகம் நியாயமானது. திருமாவளவன் சென்ற கார் வழிமறிக்கப்பட்ட விவகாரம் குறித்து காவல்துறை விசாரணையை வேகப்படுத்த வேண்டும்' என மநீம தலைவர் கமல்ஹாசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

கடந்த 7ஆம் தேதி சென்னை உயர் நீதின்றம் அருகே ஓர் ஆர்ப்பாட்டத்தில் விசிக தலைவர் திருமாவளவன் பங்கேற்று திரும்பியபோது, அந்த வழியாக சென்று கொண்டிருந்த ஸ்கூட்டர் ஒன்று திருமாவளவன் சென்ற காருக்கு குறுக்கே வந்துள்ளது. அப்போது, இருசக்கர வாகனத்தில் சென்ற நபர், அவரது வாகனத்தை நிறுத்திவிட்டு தகாராறு செய்யவே, இரு தரப்புக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

இந்த விவகாரம் குறித்து திருமாவளவன் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'உயர் நீதிமன்றம் அருகே தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சங்கத்தின் முன்பு கடந்த அக்டோபர் 7 அன்று எனது காரை வழிமறித்த நிகழ்வு 'தற்செயலாக நடந்தது அல்ல; திட்டமிட்ட சதி' என்பது தெரியவருகிறது. ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜகவினர் இதன் பின்னணியில்உள்ளனர் என்றும் எமது விசாரணையில் உறுதிபட தெரிகிறது.

எனவே, தமிழ்நாடு அரசு இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து தீவிரமாக விசாரித்திட வேண்டும். பின்னணியில் உள்ள சதியினைக் கண்டறிய வேண்டும். அத்துடன், உடனடியாக இதனை ஒளிபரப்பு செய்த தனியார் தொலைகாட்சிகளைச் சார்ந்தவர்களையும் முழுமையாக அய்யமற விசாரித்திடவேண்டுமென கோருகிறோம்' எனத் தெரிவித்திருந்தார்.

திருமாவளவனின் பதிவை பகிர்ந்த இயக்குநர் பா.ரஞ்சித், 'உயர் நீதிமன்றம் அருகே தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சங்கத்தின் முன்பு கடந்த அக்டோபர் 7 அன்று

காரை வழிமறித்த நிகழ்வு 'தற்செயலாக நடந்தது அல்ல; திட்டமிட்டசதி என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார், இதை கவனத்தில் கொண்டு தமிழக அரசு அவருக்கு உடனடியாக பாதுகாப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்' எனத் தெரிவித்தார்

இயக்குநர் ரஞ்சித்தின் பதிவை பகிர்ந்துள்ள மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரும். மாநிலங்களை எம்.பி.யுமான கமல்ஹாசன், 'தம்பி திருமாவின் சந்தேகம் நியாயமானது. இன்னொரு தம்பி பா.ரஞ்சித்தின் அக்கறை உண்மையானது. தம்பி திருமாவளவன் சென்ற கார் வழிமறிக்கப்பட்ட விவகாரம் குறித்து காவல்துறை விசாரணையை வேகப்படுத்த வேண்டும். அவரது பாதுகாப்பை அதிகரிக்க தமிழ்நாடு அரசு ஆவன செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.




## பிஹாரில் 100 இடங்களில் ஒவைசி கட்சி போட்டி

பாட்னா, அக்.13-

எதிர்வரும் பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் சுமார் 100 இடங்களில் போட்டியிட அசாதுதீன் ஒவைசியின் ஏஐஎம்ஐஎம் கட்சி திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் பிஹார் மாநிலத் தலைவர் அக்தருல் இமான் கூறியதாவது: பிஹார் அரசியல் பல ஆண்டுகளாக பாஜக தலைமையிலான கூட்டணி மற்றும் காங்கிரஸ்ஆர்ஜேடி கூட்டணி பற்றியதாகவே உள்ளது. எனவே நாங்கள் மூன்றாவது மாற்று அணி அமைக்க விரும்புகிறோம். எதிர்வரும் பிஹார் தேர்தலில் சுமார் 100 இடங்களில் போட்டியிட திட்டமிட்டுள்ளோம். இதனால் இரு அணிகளும் எங்கள் இருப்பை உணர வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

ஆர்ஜேடி தலைவர்கள் லாலு பிரசாத், தேஜஸ்வி யாதவ் ஆகியோருக்கு கூட்டணிக்கு விருப்பம் தெரிவித்து நான் கடிதம் எழுதினேன். ஆனால் எந்த பதிலும் வரவில்லை. கடந்த 2020 தேர்தலில் மதச்சார்பற்ற வாக்குகளை பிரித்ததாக ஆர்ஜேடி கூட்டணி எங்கள் மீது குற்றம் சாட்டியது. இனி அவ்வாறு குற்றம் சுமத்த முடியாது. மூன்றாவது அணி தொடர்பாக ஒத்தக் கருத்து கொண்ட கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே பாரம்பரியமாக நடக்கும், ஆண்கள் மட்டும் பங்கேற்று வழிபாடு செய்யும் திருவிழா

ராமநாதபுரம், அக்.13-

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே பாரம்பரியமாக நடக்கும், ஆண்கள் மட்டும் பங்கேற்று வழிபாடு செய்யும் திருவிழா நடைபெற்றது. எல்லைப்பிடாரி அம்மன் பீடத்தில் 39 ஆடுகள் பலியிடப்பட்டு நடந்த கறி விருந்தில் ஆயிரக்கணக்கான ஆண்கள் பங்கேற்றனர்.

# தவெக பொதுக்கூட்டத்தில் நடந்தது விபத்து: புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம் கருத்து



திருவண்ணாமலை, அக்.13-

கரூர் தவெக பொதுக்கூட்டத்தில் நிகழ்ந்த சம்பவம் ஒரு விபத்து. இதற்கு சிபிஐ விசாரணை கோருவது அர்த்தமற்றது என்று புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம் தெரிவித்தார்.

ஆரணியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் நேற்று கலந்துகொண்ட புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: கரூரில் தவெக பொதுக்கூட்டத்தில் 10 ஆயிரம் பேர் கூடவேண்டிய இடத்தில் 30 ஆயிரம் பேர் கூடியதால் 41 பேர் உயிரிழந்த அசம்பாவிதம் நடந்தது. இதற்கு விஜய்யின் காலதாமதமும் ஒரு காரணம். திரண்டிருந்த மக்கள் 6 மணி நேரம் தண்ணீர்கூட இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தனர். அப்போது, விஜய்யின் வாகனம் உள்ளே வந்ததால் நெரிசல் அதிகமாகி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இது போன்ற சம்பவம் இனி நிகழக்கூடாது. உயிரிழந்த குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணை கோருவதற்கு அர்த்தமே இல்லை. இதனை யாரும் திட்டமிட்டு செய்யவில்லை. தற்செயலாக நடைபெற்றது. இனி வரும் காலங்களில் சாலையில் மக்களை சந்திக்காமல், மைதானத்தில் பொதுக்கூட்டம் நடத்துமாறு கட்சிகளுக்கு தமிழக அரசு உத்தரவிட வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

# "விஜய்யை விமர்சிப்பதால் என்னை திமுகவின் பி டீம் என்கிறார்கள்" சீமான் ஆதங்கம்




சென்னை, அக்.13-

"இப்போது நான் விஜய்யை விமர்சிப்பதால் என்னை திமுகவின் பி டீம் என சொல்கிறார்கள். திமுக எனக்கு காசு கொடுக்கிறது என சொல்கிறார்கள். நான் மக்களுக்காக அரசியலுக்கு வந்தவன், யாருடைய சார்பும் எனக்கு தேவையில்லை'' என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார். சென்னையில் இன்று பன்னாட்டு தமிழ் கிறிஸ்தவப் பேராயம் மற்றும் சமூக நீதிப் பேரவை நடத்திய நிகழ்ச்சியில் சீமான் பேசியது: "நான் புகழ்பெற்ற நடிகராக இருந்தால், அனைத்து ஊர்களிலும் ரசிகர்கள் இருப்பார்கள். அவர்களை தொண்டராக்கிக் கொண்டு, உடனடியாக கட்டமைப்பை உருவாக்கலாம். எந்தப் பின்புலம் இல்லாத நிலையில், அனைத்து வாக்குச்சாவடியிலும் வாக்கு பெறும் ஒரே கட்சி, நாம் தமிழர்தான்.

தம்பி விஜய்யை நான் எதிர்க்கவில்லை. திமுக, காங்கிரஸ், பாஜகவைத்தான் எதிர்க்கிறோம். தம்பி விஜய்யிடம் கேள்விகளை எழுப்பினோம், அதனையே எதிர்ப்பதாக சொல்கிறார்கள். இப்போது விஜய்யை விமர்சிப்பதால் என்னை திமுகவின் பி டீம் என சொல்கிறார்கள். திமுக எனக்கு காசு கொடுக்கிறது என சொல்கிறார்கள். நான் மக்களுக்காக அரசியலுக்கு வந்தவன், யாருடைய சார்பும் எனக்கு தேவையில்லை. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் வென்ற திமுகவை விட பல்வேறு வாக்குச்சாவடிகளில் எங்களுக்கு அதிக வாக்குகள் கிடைத்திருந்தன. இங்கு மிகப் பெரிய கட்சி நாம் தமிழர் தான். திமுக தவெக இடையே போட்டி என சகோதரர் சொல்கிறார். விக்கிரவாண்டியிலும், ஈரோடு கிழக்கிலும் அவர்கள் போட்டியிடவில்லை. அங்கு உண்மையிலேயே நாம் தமிழருக்கும் திமுகவுக்கும் இடையே தான் போட்டி இருந்தது. இருவரும் திரைத் துறையில் இருந்து வந்தவர்கள் தான். ஆனால், நான் ரசிகர்களை சந்திக்கவில்லை, மக்களை சந்தித்தேன். என்னை பார்க்க வருபவர்கள் கொள்கை மணிகள். போட்டி என்பது கூட்டத்தை வைத்து கிடையாது. கருத்தியல் ரீதியாக இருக்கிறது. திராவிடமா, தமிழ் தேசியமா என்ற போட்டிதான். கூட்டணி வைப்பதாக இருந்தால் 15 ஆண்டுகளில் அவ்வளவு நெருக்கடி வந்தபோது வைத்திருக்க மாட்டேனா? எந்த காலத்திலும் திராவிட கட்சிகளுடனும், இந்திய கட்சிகளுடனும் நாம் தமிழர் கட்சி தேர்தல் உடன்பாடு வைக்காது என்பதை கட்சி தொடங்கியபோதே அறிவித்தேன். இப்போதும் தனித்து நிற்போம். 2029ம் ஆண்டு மக்களவை தேர்தலிலும் தனித்து நிற்போம். காங்கிரஸுக்கும் பாஜகவுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. இங்குள்ள பிறவி கோழைகள்தான் சீமானுக்கு வாக்களித்தால் பாஜக வந்துவிடும் என சொல்லி அச்சத்தை ஏற்படுத்துகிறார்கள். நாம் பாஜகவின் பி டீம் என்றால் திமுக ஏ டீம். சிறுபான்மையினரின் பாதுகாப்பு திமுக என நம்பி, திமுகவை அவர்களே பாதுகாத்து வருகின்றனர். மக்கள் பிரச்சினைகளை பார்த்து படிப்பவர்கள் எப்படித் தலைவனாக இருக்க முடியும்?. பள்ளிக்கரணை ஏரி விவகாரத்தில் முன்னாள் முதல்வர்கள் மறைந்த கருணாநிதியும், ஜெயலலிதாவும் மனிதர்களுக்கு மிகப் பெரிய துரோகத்தை செய்துவிட்டனர். திருடர்கள் கூடியிருக்கும் இடம் திராவிடம். திருடர்கள் முன்னேற்றம், அனைத்திந்திய திருடர்கள் முன்னேற்றம் என பரிணாமம் பெற்று வருகிறது'' என்று சீமான் பேசினார்.

# "தவெகவை கூட்டணிக்குள் இழுக்க இபிஎஸ் செய்வது குள்ளநரித்தனம்" - தினகரன் சரமாரி தாக்கு




அரூர், அக்.13-

"கரூர் துயர சம்பவத்தில் தவெக தொண்டர்கள் நிர்வாகிகள் துயரத்தில் உள்ள நிலையில், குள்ளநரித்தனமாக அவர்களை கூட்டணிக்கு அழைக்கும் வகையில் செயல்படுவது துரோகத்தின் எப்பேர்பட்ட வகையை சார்ந்தது'' என இபிஎஸ் குறித்து அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தருமபுரி மாவட்ட அமமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் அரூரில் இன்று நடைபெற்றது. கூட்டத்தில் பங்கேற்ற அமமுக பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன், அரூர் சட்டப்பேரவை (தனி) தொகுதிக்கு அமமுக சார்பில் முன்னாள் எம்எல்ஏ ஆர்.ஆர். முருகனை வேட்பாளராக அறிமுகப்படுத்தினார். முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய டிடிவி தினகரன், "அமமுகவை தவிர்த்துவிட்டு யாராலும் ஆட்சி அமைக்க முடியாது என்ற நிலை தற்போது உள்ளது.

2026தேர்தலில் அமமுக அமைக்கும் கூட்டணி வெற்றி கூட்டணியாக இருக்கும். எங்கள் கூட்டணிதான் ஆட்சி அமைக்கும். எந்த கூட்டணியில் இருந்தாலும் அரூர் தொகுதியில், ஏற்கெனவே அதிமுக சார்பில் வெற்றி பெற்ற ஆர்.ஆர். முருகன் போட்டியிடும் வகையில் உறுதியாக இந்த தொகுதியை ஒதுக்குவார்கள். ஏற்கெனவே சோளிங்கர் உள்ளிட்ட தொகுதிகளில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

நாங்கள் தற்போது யாரோடும் கூட்டணி அமைக்கும் முயற்சியில் இல்லை. ஏற்கெனவே 2017ல், சென்னை ஆர்.கே. நகர் தொகுதியில் தனித்து நின்று வெற்றி பெற்றோம். 2021 தேர்தலில் நாங்கள் வெற்றி பெற முடியாவிட்டாலும் துரோகம் செய்த பழனிசாமியை ஆட்சிக்கு வரவிடாமல் தடுத்தோம். வரும் காலத்தில் துரோகத்தை முதலீடாக கொண்டு அரசியலில் யாரும் வெற்றி பெற முடியாது என்பதை உணர்த்தும் வகையில் எடப்பாடி திமுக (எடிஎம்கே) இந்த தேர்தலில் படுதோல்வியடைய வேண்டும்.

பழனிசாமி தற்போது விரக்தியில் தரம் தாழ்ந்து பேசி வருகிறார். தனது கூட்டத்தில் மற்றொரு கட்சியின் கொடியை கொடுத்து ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். கரூர் துயர சம்பவத்தில் தமிழகமே துயரில் ஆழ்ந்து கொண்டிருக்கும் வேளையில், தவெக தொண்டர்கள், நிர்வாகிகள் துயரத்தில் உள்ள நிலையில், குள்ளநரித்தனமாக அவர்களை கூட்டணிக்கு அழைக்கும் வகையில் செயல்படுவது துரோகத்தின் எப்பேர்பட்ட வகையை சார்ந்தது?!

பழனிசாமி தலைமையில் கட்சி நாளுக்கு நாள் பலவீனமாகி வருகின்றது. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பிஜேபிக்கு எதிராக பேசி, மோடிக்கு துரோகம் செய்துவிட்டு வெளியேறியவர், இன்று பச்சோந்தி போல் பிஜேபிக்கு கூட்டணியில் சேர்ந்துள்ளார். இதனை அந்தக் கூட்டணியில் உள்ள பிற கட்சியினரே விரும்பவில்லை.

தவெக புதிய கட்சி, கொடுமையான விபத்து நடந்ததால் அதிர்ச்சியில் உறைந்து உள்ளனர். கரூர் சம்பவம் ஒரு விபத்து, அதற்கு விஜய் தார்மிக பொறுப்பு ஏற்க வேண்டும். அதற்காக அவர் மீது குற்றம் சாட்டக்கூடாது. பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தமிழகம் முழுவதும் பிரச்சார பயணம் செல்ல உள்ளார். முதல்வர் வேட்பாளராக பழனிச்சாமி தோளில் வைத்துக் கொண்டு போகப் போகிறார். அவரது பயணம் வெற்றி பெற வாழ்த்துக்கள்'' என்றார் தினகரன்.




## பல்லாவரத்தில் தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பாக

# பாலஸ்தீன மக்களை இனப்படுகொலை செய்த பயங்கரவாத இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

பல்லாவரம், அக்.13-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பாக பாலஸ்தீன மக்களை இனப்படுகொலை செய்த பயங்கரவாத இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி சார்பாக நடைபெற்றது தலைமை குரோம்பேட்டை சுரேஷ், தொகுதி செயலாளர், சேகர், சுபேந்திரன், கார்த்திக், சாய்சுரேஷ், ஏழுமலை, தீனா, குணா மற்றும் பல்லாவரம் நிர்வாகிகள் இதில் தமிழக வாழ்வுரிமைக்கட்சி குன்றத்தூர் ஞானம், ஆர்.கே மணி, அப்துல் ஷபிக், பொன் ராஜ், வெங்கடேசன், மண்ணிவாக்கம் சினிவாசன், மற்றும் தாம்பரம் நிர்வாகிகள் மனித நேய மக்கள் கட்சி நிர்வாகிகள் நயினார், அப்துல் ரகுமான், தமிம் அன்சாரி, ரஹமத்துல்லா, சௌகத் அலி, ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார்கள்



■ தாராபுரத்தில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் திருப்பூர் மாவட்டம் 16வது மாநாடு நடைபெற்றது. விழாவின் கலைப் பேரணியை மாநிலக்குழு, மாவட்டக்குழு பொறுப்பாளர்கள், கலைஞர்கள் ஆகியோருடன் இணைந்து தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற பொதுக்குழு செயற்குழு உறுப்பினர் கலைமாமணி கலாராணி கொடியசைத்து துவக்கி வைத்தார். அதைத்தொடர்ந்து கலை மாலையில் நாட்டுப்புற பாடல்கள், சமத்துவ கும்மி, நாடகம் நடைபெற்றது.



# பம்மல் 11வது வார்டு திமுக சார்பில் சொட்டு மருந்து மற்றும் இலவச மகப்பேறு மருத்துவ முகாம் நடைபெற்றது

பம்மல், அக்.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பம்மல் பகுதி 1வது மண்டல 11வது வார்டு திமுக சார்பில் சொட்டு மருந்து மற்றும் இலவச மகப்பேறு மருத்துவ முகாம் பம்மல் திருவள்ளுர் தெரு காந்தி நகர் பகுதியில் அமைந்துள்ள தனியார் பள்ளியில் இலவச மருத்துவ முகாம் 11வது வார்டு ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி கலந்து கொண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கினார் அதனைத் தொடர்ந்து மகப்பேறு ஆலோசனை கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோதனை இலவச இரத்த பரிசோதனை மற்றும் கலைஞர் காப்பீடு திட்டம் அட்டை வழங்கினார் இதில் 11வது வார்டு கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டுள்ளார்

# சிறப்பு விசாரணைக் குழு அமைத்ததை எதிர்த்து தவெக தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் இன்று தீர்ப்பு

புதுடெல்லி, அக்.13-

கரூர் சம்பவம் தொடர்பாக சிறப்பு விசாரணைக் குழு அமைத்ததை எதிர்த்து தவெக தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் நாளை தீர்ப்பளிக்கவுள்ளது.



கடந்த மாதம் 27ம் தேதி கரூரில் நடந்த தவெக பிரச்சாரக் கூட்டத்தில் பெண்கள், குழந்தைகள் என 41 பேர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர். இதுதொடர்பான வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி, தவெக தலைவர் விஜய்யை கடுமையாக விமர்சித்தும், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த வடக்கு மண்டல போலீஸ் ஐஜி அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு விசாரணைக் குழு அமைத்தும் உத்தரவிட்டிருந்தார்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து தவெக சார்பில் ஆதவ் அர்ஜுனா, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அத்துடன், பாதிக்கப்பட்டவர்கள் தரப்பிலும் சிபிஐ விசாரணை கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் மீதான விசாரணை,உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜே.கே.மகேஸ்வரி, என்.வி.அஞ்சரியா ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அப்போது, கரூர் சம்பவம் தொடர்பான வழக்கை உயர் நீதிமன்ற மதுரை கிளை விசாரிக்கும் போது, சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி விசாரித்தது ஏன் என கேள்வி எழுப்பிய நீதிபதிகள், இதுதொடர்பாக தமிழக அரசு தரப்பில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய உத்தரவிட்டு தீர்ப்பை தள்ளி வைத்திருந்தனர். இந்நிலையில் இந்த வழக்கில் நீதிபதிகள் இன்று (அக்.13) தீர்ப்பளிக்கஉள்ளனர்.

# காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரியின் 50வது ஆண்டு பொன்விழா முன்னிட்டு மாபெரும் வாக்கத்தான்

வேளச்சேரி, அக்.13-

செங்கல்பட்டு மாவட்டம் வேளச்சேரியில் காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரியின் 50வது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு மாபெரும் வாக்கத்தான் அக்டோபர் 11, 2025 அன்று சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு சங்கம் இஏபிஏ மற்றும் இஸ்லாமிய வர்த்தகர்கள் நலசங்கம் மற்றும் எக்ஸ்னோரா ஆகியவற்றுடன் இணைந்து ஆரோக்கியமான காற்று பசுமையான எதிர்காலம் என்ற கருப்பொருளில் சூழலியல் நடைப்பயணத்தை நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நடைப்பயணத்தில் 1500க்கும் மேலான மாணவர்கள், பேராசிரியர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், நிர்வாக ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் உற்சாகமாக பங்கேற்றனர்.

கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் ஜனாப் எம்.ஜி.தாவூத் மியாகான், மற்றும் தாம்பரம் மாநகராட்சியின் துணை மேயர் கோ.காமராஜ், உதவி வனப் பாதுகாவலர் சி.இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டு கொடியசைத்து தொடங்கி வைத்தனர் இந்த நடைப் பயணமானது காமராஜபுரம் பேருந்து நிறுத்தத்தில் இருந்து தொடங்கி கல்லூரி வளாகத்தில் முடிவடைந்தது. இதனை தொடர்ந்து கல்லூரியில் சிறப்பு கூட்டம் நடைபெற்றது இதில் துணை மேயர் கோ. காமராஜ், மற்றும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அனைவரும் சிறப்பு உரையாற்றினார்கள்

கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் ஜனாப் எம்.ஜி.தாவூத் மியாகான் அவர்கள் 50வது ஆண்டு கல்லூரி பொன்விழாவை முன்னிட்டு நடத்தப்படும் இந்த நடைபயணம் மக்களிடையே பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்த மற்றும் சுற்றுசூழலை பாதுகாக்க நடைபெற்ற






ஒரு முயற்சி என்று தன் தலைமையுரையில் குறிப்பிட்டார். சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு சங்கத்தின் செயலாளர் எம்.தங்கராஜ், சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆர். திருமூர்த்தி, இஸ்லாமிய வர்த்தகர்கள் நல சங்க செயலாளர் அயூப் கான் மற்றும் தாம்பரம் வனத்துறை ரேஞ்சர் கமலக்கண்ணன் உள்ளிட்ட பிற முக்கிய விருந்தினர்கள் மற்றும் கல்லூரியின் முதல்வர் டாக்டர் எம்.அம்துல் தவாப், கல்லூரி கண்காணிப்பாளர் ஏ.மசார் கான், துணை முதல்வர்கள், ஐ.க்யூ.ஏ.சி. ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் பங்கேற்றனர்.

காமராஜபுரம் பேருந்து நிறுத்தத்தில் இருந்து தொடங்கிய ஊர்வலத்தில், மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் பிற கல்லூரிகளைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர், அனைவரும் பதாகைகளில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு செய்திகளை ஏந்தியிருந்தனர். நிகழ்வின் இறுதியில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும், ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்கை தவிர்ப்பது, மரம் நடுவதை ஊக்குவித்தல் மற்றும் ஆரோக்கியமான காற்றை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படுவது குறித்து கூட்டு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

சமூகத்தை முன்னிறுத்தி சுற்றுச்சூழல் நடவடிக்கை மூலம் கிரகத்தைப் பாதுகாப்பதில் கூட்டு முயற்சிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக இந்தநிகழ்வு அமைந்தது.



# போர் நிறுத்தத்தை கண்காணிக்க காசாவில் அமெரிக்க வீரர்கள் முகாம்

காசா, அக்.13-

கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் முதல் இஸ்ரேல் ராணுவம், காசாவின் ஹமாஸ் குழுவினர் இடையே போர் நடைபெற்று வந்தது. அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பின் முயற்சியால் இருதரப்பினர் இடையே எகிப்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. கடந்த 9ம் தேதி இரு தரப்பு இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புதல் அளித்த பிறகு கடந்த 10ம் தேதி காசாவில் போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. அமைதி ஒப்பந்தத்தின்படி ஹமாஸ் பிடியில் உள்ள இஸ்ரேலிய பிணைக்கைதிகள் 72 மணி நேரத்தில் விடுக்கப்பட வேண்டும்.

இந்த சூழலில் அமெரிக்கா, எகிப்து, கத்தார், துருக்கி, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளை சேர்ந்த ராணுவ அதிகாரிகள், வீரர்கள் காசாவில் முகாமிட்டு போர் நிறுத்தத்தை கண்காணிக்க உள்ளனர். இதன்படி அமெரிக்காவின் சார்பில் 200 வீரர்கள் காசாவுக்கு அனுப்பப்பட உள்ளனர். அமெரிக்க ராணுவத்தின் முதல் குழு நேற்று இஸ்ரேலின் டெல் அவிவ் நகருக்கு வந்தது. அங்கிருந்து அவர்கள் காசா எல்லைப் பகுதிக்கு சென்றனர். இந்த வார இறுதிக்குள் 200 அமெரிக்க வீரர்கள் இஸ்ரேலுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் காசாவில் முகாமிட்டு போர் நிறுத்தத்தை முழுமையாக கண்காணிக்க உள்ளனர்.



# சீனப் பொருட்களுக்கு கூடுதலாக 100% வரி: ட்ரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன், அக்.13-

சீன பொருட்களுக்கு நவம்பர் 1ம் தேதி முதல் கூடுதலாக 100% வரிவிதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக பொறுப்பேற்ற ட்ரம்ப் பல்வேறு நாடுகளின் பொருட்களுக்கான வரியை கணிசமாக அதிகரித்தார். இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதால் வரியை சற்று குறைத்தார். அந்த வகையில் சீன பொருட்களுக்கு இப்போது 30% வரி விதிக்கப்படுகிறது.

இந்நிலையில், அதிபர் ட்ரம்ப்கடந்த 10ம் தேதி தனது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளதாவது: ஸ்மார்ட்போன், மின்சார வாகனங்கள், ராணுவ தளவாடங்கள் உற்பத்திக்கு தேவைப்படும் அரியவகை தனிமங்கள் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்படும் என்று சீன அதிபர் ஜி ஜின்பிங் உலக

நாடுகளுக்கு கடிதம் எழுதியுள்ளார். உலக நாடுகளை தனது பிடியில் வைத்திருக்க விரும்பும் சீனாவை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

எனவே, சீனாவில் இருந்து இறக்குமதியாகும் அனைத்து பொருட்களுக்கும் நவம்பர் 1ம் தேதி முதல் கூடுதலாக 100% வரிவிதிக்கப்படும். சீனா வேறு ஏதேனும் நடவடிக்கை எடுத்தால், இந்தஉயர்வு உடனடியாக அமலுக்கு வரும்.இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அக்டோபரில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்திக்க உள்ளதாக ஏற்கெனவே தெரிவித்திருந்த ட்ரம்ப், அந்த சந்திப்பு நடப்பதில் அர்த்தம் இல்லை என்றும் அந்த பதிவில் கூறியுள்ளார்.




# கோவையில் 8000 சதுர அடி பரப்பளவில் பிரம்மாண்ட சோரூமை துவங்கிய ஜோஸ் ஆலுக்காஸ் ஜுவல்லர்ஸ்

கோவை, அக்.12-

கோவை ஒப்பணக்கார வீதியில் ஜோஸ் ஆலுக்காஸ் ஜுவல்லர்ஸ் புதிய கிளை துவக்க விழா மற்றும் ஜோஸ் ஆலுக்காஸ் குழுமத் தலைவரான ஜோஸ் ஆலுக்காஸின் சுய வரலாறு புத்தகமான தங்கம் நூல் தமிழ் பதிப்பு வெளியீட்டு விழா நடைபெற்றது.

இதில் ஜோஸ் ஆலுக்காஸ் பிராண்டு தூதரும் திரைப்பட நடிகருமான ஆர் மாதவன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு புதிய கிளையை திறந்து வைத்தார் மேலும் தங்கம் நூல் தமிழ் பதிப்பையும் வெளியிட்டார்.

இதுகுறித்து ஜோஸ் ஆலுக்காஸ் குழுமத் தலைவர் ஜோஷ் ஆலுக்காஸ் கூறுகையில் ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தின் வளர்ச்சிப் பணியில் தமிழ்நாடு எப்போதும் முக்கிய பங்கு வைத்து வருகின்றது மேலும் தமிழ்நாட்டில் தான் அதிக எண்ணிக்கையிலான சோரூம்கள் பரவலான இப்பயும் கொண்டுள்ளதாக தெரிவித்தார் மேலும் கோவை மாநகர மக்களின் ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தின் வடிவமைப்பு மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வைக்கின்றனர் எனவே அவர்களே நம்பிக்கை மற்றும் பாசத்திற்கு சமர்ப்பணமாக இங்கு இந்த பிரதான ஆபரண விற்பனையகம் தொடங்கியது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது இந்தக் கிளையில் தங்கம் வைரம் பிளாட்டினம் மற்றும் வெள்ளி நமது கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய வடிவமைப்புகளுடன் கொண்ட நகைகள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ் கிடைக்கும் வகையில் இரண்டு தளங்கள் கொண்டதாக மிக பிரம்மாண்ட கிளை துவங்கப்பட்டுள்ளது தொடர்ந்து மக்களுக்கு சேவையாற்றுவதில் நாங்கள் கொண்டிருக்கும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை பிரதிபலிப்பாக இந்த ஷோரூம் திகழ்கிறது என்று கூறினார்..

திறப்பு விழாவிற்கு ஜோஸ் ஆலுக்காஸ் நிர்வாக இயக்குனர்கள் வர்கீஸ் ஆலுக்காஸ் பால் ஆலுக்காஸ் மற்றும் ஜான் ஆலுக்காஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கணபதி ராஜ்குமார் எம்பி மேயர் ரங்கநாயகி துணை மேயர் வெற்றிச் செல்வன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பிரபலங்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மாணவிகளை இரவில் கல்லூரிக்கு வெளியே செல்ல அனுமதிக்கக்கூடாது மம்தா பானர்ஜி அறிவுரை

கொல்கத்தா, அக்.13-

துர்காபூரில் மருத்துவ மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட நிலையில், மாணவிகள் இரவில் வெளியே செல்ல கல்லூரிகள் அனுமதிக்கக் கூடாது என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக பேசிய மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, "இந்த சம்பவத்தைக் கண்டு நான் அதிர்ச்சியடைந்தேன், ஆனால் தனியார் மருத்துவக் கல்லூரிகளும் தங்கள் மாணவர்களை, குறிப்பாக பெண்களை கவனித்துக் கொள்ள வேண்டும். பெண்கள் இரவில் கல்லூரிக்கு வெளியே செல்ல அனுமதிக்கக்கூடாது. பெண்களும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். சம்பவம் நடந்தது வனப்பகுதியாக உள்ளது. போலீசார் குற்றவாளிகள் அனைவரையும் தேடி வருகின்றனர்.



இந்த சம்பவத்தில் குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். யாரும் மன்னிக்கப்பட மாட்டார்கள். யார் குற்றவாளியாக இருந்தாலும் அவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள். இச்சம்பவத்தில் ஏற்கெனவே மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நாங்கள் கடுமையான நடவடிக்கை எடுப்போம். இது மற்ற மாநிலங்களில் நடக்கும்போது, அதுவும் கண்டிக்கத்தக்கது" என்று அவர் கூறினார்.

மேற்கு வங்க மாநிலத்தின் துர்காபூரில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி ஒன்றில், ஒடிசாவைச் சேர்ந்த மாணவி ஒருவர் 2ம் ஆண்டு எம்.பி.பி.எஸ் படிக்கிறார். இவர் தனது ஆண் நண்பர் ஒருவருடன் நேற்று முன்தினம் மாலை வெளியே சென்று விட்டு இரவு 8.30 மணியளவில் கல்லூரிக்கு திரும்பினார்.

அப்போது ஒரு கும்பல் மருத்துவ மாணவியை மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். மாணவியுடன் சென்ற ஆண் நண்பர் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார். இச்சம்பவம் குறித்து மாணவியின் தந்தை நேற்று போலீஸில் புகார் அளித்தார். இச்சம்பவம் தொடர்பாக மருத்துவ மாணவியின் நண்பர் உட்பட பலரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. பாதிக்கப்பட்ட மாணவி துர்காபூரில் உள்ள மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161